People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

09.09.2017

# பத்திரிகைச் செய்தி

'நீட்' நுழைவுத்தேர்வு என்பது கல்விக்கான உரிமையையும், சமத்துவ உரிமை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமைகளையும் மீறும் செயலாகும். இச்செயலை எதிர்த்துப் போராடும் மாணவர்களை அரசு கைது செய்வது கருத்துரிமையையும் கூட்டம் கூடுவதற்கான உரிமையையும் மீறும் செயலாகும். அரசின் மனித உரிமை மீறல்களை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ள ''நீட் தேர்வு'' என்பது மருத்துவக்கல்வி பயில விரும்பும் அரசுப்பள்ளி மாணவர்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

தமிழக மாணவர்கள், மாநிலக் கல்வி பாடத்திட்டம், மெட்ரிக்குலேசன் கல்வி பாடத்திட்டம், சி.பி.எஸ்.இ கல்வி பாடத்திட்டம் ICSE பாடத்திட்டம் என்பது போன்ற வகையான பாடத்திட்ட முறைகளில் கல்வி பயிலுகின்றனர்.

ஆனால் ''நீட் தேர்வு'' என்பது சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்தின் அடிப்படையில் மட்டும்தான் உள்ளது. இதனால் சி.பி.எஸ்.இ மாணவர்கள் மட்டுமே பெரிதும் பயனடைகின்றனர். மற்ற மாணவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். நீட் தேர்வானது கல்வியில் பாகுபாட்டை ஏற்படுத்துகிறது.

உயர்கல்வியை அனைவரும் சமமாகப் பெற முடியாமல் பாகுபடுத்தும் நீட் தேர்வு கல்விக்கான உரிமையையும், சமத்துவ உரிமை உள்ளிட்ட அடிப்படை மனித உரிமையையும் மீறும் செயலாகும்.

அகில உலக மனித உரிமைப் பிரகடனம் பிரிவு 26-இல் உயர்கல்வி என்பது அனைவரும் சமமாகப் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் என்று பகுத்துகூறுகிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

அய்.நா சபையின் நிலைத்த வளர்ச்சி கொள்கைகள் எண் 4 (3) ன் படி 2030க்குள் சமவாய்ப்பு அனைத்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் பல்கலைக்கழகங்களில் படிக்க சமவாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை நம் நாடும் ஏற்றுக் கொண்டுள்ளது.

பட்டியலினத்தைச் சேர்ந்த மாணவி அனிதா +2 பொதுத்தேர்வில் 1176 மதிப்பெண்கள் பெற்றும் இந்த 'நீட்' தேர்வினால் மருத்துவக்கல்வி பெற முடியாத நிலை ஏற்பட்டு தற்கொலைக்குத் தூண்டியுள்ள செயல் கல்விக்கான உரிமைக்கும் சமூக நீதிக்கும் எதிரானது.

இவற்றையெல்லாம் கண்டித்து தன்னெழுச்சியாய் போராட்டத்தில் ஈடுபடும், ஈடுபட்ட மாணவர்களை அரசு கைது செய்வதை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாகக் கண்டனம் செய்கிறது. அரசின் இச்செயல் அய்.நா. உறுதிப்படுத்தியுள்ள கருத்துரிமைக்கும் கூட்டம் கூடுவதற்கான உரிமைக்கும் எதிரான செயலாகும்.

அய்.நா சபையின் கட்டளையின்படி ஐ.நா.வின் சிறப்புப் பிரதிநிதிகளான திருமிகு. மைனாகியா மற்றும் கிறிஸ்டோப் ஹெயின்ஸ் அவர்களால் மார்ச் 2016ம் ஆண்டு மக்கள் ஒன்று கூடும்போது அக்கூட்டங்களை முறையாக வரைமுறைப்படுத்துவதற்கான 10 வழிகாட்டுதல்களை உருவாக்கியுள்ளது. இந்த வழிகாட்டுதல்களில் அனுமதி பெறாமலும் அவசரமான நோக்கங்களை அரசுக்கு தெரியப்படுத்த வேண்டிய சூழல் வரும்போது அமைதியான, வன்முறையற்ற போராட்டங்களை முன்னெடுப்பது சனநாயகத்திற்கு உட்படவை என கூறியுள்ளது.

ஆகவே உச்சநீதிமன்றத்தின் 08.09.2017 அன்றைய தீர்ப்பினை அதே நாளன்று தமிழக காவல்துறைத் தலைவர் அதை அமுல்படுத்த அனைத்து மாநகர காவல்துறை ஆணையர்களுக்கும் மண்டல காவல்துறை தலைவர் அவர்களுக்கும் தீர்ப்பின் உத்தரவு நகலுடன் கடிதம் அனுப்பியுள்ளார். உச்சநீதிமன்றத் தீர்ப்பில் சட்டம் ஒழுங்கிற்கு குந்தகம் விளைவிக்கும் செயல்பாடுகளுக்கு மட்டும் வழக்குகள் பதிவு செய்யுமாறு வலியுறுத்தியுள்ளது. ஆழ்ந்த வருத்தத்தில் இருக்கக்கூடிய தமிழக இளைஞர்கள், மக்கள் இயக்கங்கள், பெற்றோர்கள், தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் உச்சநீதிமன்றத்தின் “நீட்” தீர்ப்பிற்கு எதிராகவும் மத்திய மாநில அரசிற்கு எதிராகவும் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு சனநாயகப்பூர்வமாக போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறு அவர்கள் சட்ட ஒழுங்கிற்கு குந்தகம் ஏற்படாதவாறு தங்களது எதிர்ப்பினை போராட்டத்தின் வாயிலாக குரல் எழுப்புவது, அவர்களது சனநாயக உரிமை என்றும் அவ்வாறு போராடுபவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவும் தேவையில்லை எனவும் கூறியுள்ளது.

ஆகவே தமிழக காவல்துறை உச்சநீதிமன்ற “நீட்” தீர்ப்பினை மட்டும் வைத்துக்கொண்டு, கள ரீதியாக போராடும் நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்வதும் கைது செய்வதும் தீர்ப்பிக்கு எதிரானதாகும். அமைதியாக சட்ட ஒழுங்கு பாதிப்பு இல்லாமல் போராட உரிமை உண்டு. சனநாயக ரீதியான, வன்முறை எதிர்ப்பு குரலுக்கு உச்சநீதிமன்ற தீர்ப்பினை காட்டி கைது நடவடிக்கை போன்ற எதிர்மறையான நடவடிக்கைகளை தவிர்த்து உச்சநீதிமன்ற உத்தரவின் சரத்துக்களை முறையாக கடைப்பிடிக்கவேண்டும் என்றும் மக்கள் கண்காணிப்பகம் தெரிவிப்பதோடு அரசின், சனநாயக முறைப்படி போராடுபவர்கள் மீது கைது நடவடிக்கை உடனடியாக தவிர்க்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது.

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்
மக்கள் கண்காணிப்பகம்